# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 07 | குடியியற் கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..........................

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) நாம் வாழும் சமூகத்தின் மிகச் சிறிய அலகு.
1) குடும்பம் 2) பாடசாலைகள் 3) சனசமூக நிலையம் 4) கோயில்.

02) எமது வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் நிரந்தரமானதும் சரியானதும் தீர்க்கமானதுமான முடிவுகள்.
1) வாழ்க்கையின் பிரச்சினைகளாகும். 2) வாழ்க்கையின் குறிக்கோள்களாகும்.
3) வாழ்க்கையின் மாற்றங்களாகும். 4) வாழ்க்கையின் சவால்களாகும்.

03) உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமான ஒன்று.
1) பொருத்தமற்ற புத்தகங்கள் 2) சிறந்த நூல்கள்.
3) தீய நண்பர் 4) பொறாமை.

04) விளையாட்டில் ஈடுபடுவதனால் ஒருவரிடத்தில் விருத்தியடைகின்ற முக்கிய பண்பு.
1) ஆக்கத்திறன் ஏற்படுதல்.
2) வெற்றி தோல்வியை மகிழ்ச்சியாக ஏற்றக் கொள்ளல்.
3) கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனை விருத்தி செய்தல்.
4) அனைத்தையும் அழகியல் உணர்வுடன் நோக்கும் ஆற்றலை விருத்தி செய்தல்.

05) பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளில் ஒன்று.
1) அந்த நேரத்தில் பெரு மூச்சு விடுதல்.
2) முகம் சோர்வடைதல்.
3) சித்திரம் வரைதல் போன்ற அழகியற் செயற்பாடுகள்.
4) கவலைப்படுதல்.

06) பின்வருவனவற்றுள் உமது உரிமையாகக் கூறக்கூடியது.
1) பெற்றோருக்குக் கீழ்ப்படிதல்.
2) மகிழ்ச்சியான குடும்பச் சூழலில் வாழ்தல்.
3) மூத்தவர்களுக்கு அன்பு, கருணை காட்டுதல்.
4) உற்சாகமாக கல்விச் செயற்பாட்டில் ஈடுபடல்.

07) அயலவர்களின் சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் செயல்.
1) சிரமதான வேலை 2) கூரை வேய்தல்
3) அதிக ஒலியுடன் வானொலி 4) வயல் வேலை.

08) உங்கள் தாயின் தம்பியின் மனைவியை அழைப்பதற்குப் பிரயோகிக்கின்ற உறவு முறை.
1) சகோதரி 2) மதினி 3) மாமி 4) சின்னம்மா.

09) சமூகம் நிலைத்திருப்பதற்கு அவசியமான மனித வளத்தை வழங்குவதில் பிரதான இடம் வகிப்பது.
1) குடும்பம் 2) பாடசாலை 3) கோயில் 4) சனசமூகநிலையம்

10) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய பண்பு.
1) பொறாமை 2) சுயநலன் 3) பொறுமை 4) நேர்மையின்மை.

11) யாதாயினும் ஒரு விடயப்பரப்பு தொடர்பான தகவல்களை முன்வைக்கின்ற மூலாதாரங்களுக்கு வழங்கும் பெயர்.
1) தொகுப்பு 2) தரவுகள் 3) தகவல்கள் 4) ஊடகம்.

12) பின்வருவனவற்றுள் அரசியல் உரிமையாக அமைவது.
1) வாழும் உரிமை 2) கல்வி கற்கும் உரிமை.
3) வாக்களிக்கும் உரிமை 4) விரும்பும் இடத்தில் வாழும் உரிமை.

13) இலங்கையில் கட்டாயக் கல்வி வயது.
1) 10 வயது 2) 12 வயது 3) 14 வயது 4) 16 வயது.

14) பிரஜை ஒருவரின் சட்டம் சார்ந்த கடமைகளுள் ஒன்று.
1) பெற்றோரைப் பராமரித்தல் 2) சம்பிரதாயங்களைப் பேணுதல்
3) சுயமரியாதை 4) அரசாங்கத்துக்கு கட்டுப்படல்.

15) நமது கடமைகளில் ஒன்று
1) நன்றாகக் கற்றல்
2) பிறருக்கு இடையூறு செய்தல்.
3) பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றாமை.
4) விரும்பும் சமயத்தைப் பின்பற்றல்.

16) குடும்பத் தலைவரின் பொறுப்பு.
1) பிள்ளைகளை சிறந்த பிரஜையாக உருவாக்குதல்.
2) சட்டங்களை ஓரளவு மதித்தல்.
3) பொறுப்புடன் செயற்படாதிருப்பதை விரும்புதல்.
4) முதியோரை பராமரிப்பு நிலையத்தில் சேர்த்தல்.

17) ஓய்வு நேரத்தில் நாம் செய்யக் கூடிய மிகப் பொருத்தமான செயல்.
1) நித்திரை செய்தல்.
2) பிறருடன் சண்டை பிடித்தல்.
3) கைப்பணிப் பொருட்களைச் செய்தல்.
4) சொத்துக்களைச் சேதப்படுத்தல்.

18) பாடசாலையின் தலைவர்
1) மாணவ முதல்வர் 2) உபஅதிபர் 3) ஆசிரியர் 4) அதிபர்

19) நாம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நவீன முறை.
1) இணையம் 2) செய்தித்தாள் 3) தொலைநோக்கி 4) வானொலி

20) பின்வருவனவற்றில் ஒருவரின் பலமாகக் காணப்படுவது.
1) கோபம் 2) பொறாமை 3) நேர்மை 4) பயம்.

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **1ம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.**

*01)*

1) குடியியற் கல்விப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை ஒன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
2) இக் கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகு யாது? (03 புள்ளிகள்)
3) இக் கணிப்பீட்டை மேற்கொள்வதற்கு நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் மூன்று ஐக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
4) இக் கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்ற நன்மைகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

*02)*

1) குடும்ப உறுப்பினர்களின் தன்மைக்கேற்ப குடும்பத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
2) விரிவான குடும்பத்தின் சிறப்பம்சங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
3) குடும்பமாக வாழும் போது கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
4) குடும்ப அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

*03)*

1) ஒருவர் மற்றவரிலிருந்து வித்தியாசப்படும் அம்சங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
2) உங்களிடம் காணப்படும் பலமான விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
3) சமூகத்தில் காணப்படும் தீய விடயங்களுக்கு மூன்று உதாரணம் தருக? (03 புள்ளிகள்)
4) சமூக நன்மைக்குக் காரணமாக அமையும் நிறுவனங்கள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

*04)*

1) விளையாட்டில் ஈடுபடுவதால் விருத்தியடையும் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
2) அழகியற் செயற்பாடுகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
3) மனவெழுச்சிகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
4) பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

*05)*

1) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய குணவியல்புகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
2) அயலவர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
3) அயலவர்களின் சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
4) உமது குடும்பத்தில் கொண்டாடப்படும் விழாக்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

*06)*

1) ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான ஆளிடைத் தொடர்பு காரணமாக கிடைக்கும் நன்மைகள் மூன்று குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
2) சமூகத்தில் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
3) பொதுசன ஊடகங்களினூடாக எமக்கு அன்றாடம் தேவைப்படும் முக்கிய தகவல்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
4) பரீட்சையில் சித்தி எய்த தவறும் சந்தர்ப்பத்தில் அச்சவாலை சாதகமாக எதிர்கொள்ளும் மாற்று வழிகள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

*07)*

1) உமக்குத் தெரிந்த சிவில் உரிமைகள், அசியல் உரிமைகள் இவ்விரண்டு குறிப்பிடுக? *(03 புள்ளிகள்)*
2) சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக? *(03 புள்ளிகள்)*
3) இன்றைய நவீன உலகின் நபரொருவர் எதிர்நோக்கும் சவால்கள் மூன்றைக் குறிப்பிடுக? *(03 புள்ளிகள்)*
4) சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு நாம் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள் மூன்று தருக? *(03 புள்ளிகள்)*